# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

***(19 ஆவது அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத்*
*சி தொலவத்த அவர்களால் 2023, ஏப்பிறல் மாதம் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, மாச்சு மாதம் 22 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 172 ஆம் சட்டமூலம் ]**


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## (19 ஆவது அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

***1.*** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் கூறப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 365 ஆம் பிரிவைத் திருத்துதல்

***2.*** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறித்துரைக்கப்படும்) (19 ஆம் அதிகாரம்) தண்டனைச் சட்டக்கோவையின் 365 மற்றும் 365அ உறுப்புரை பின்வருமாறு இதனால் திருத்தியமைக்கப்படுகிறது:-

இயற்கைக்கு முறனான தவறுகள் பற்றி குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளைத் திருத்துதல்

(i) முதன்மைச் சட்டவாக்கத்தின் 365 ஆம் பிரிவை நீக்கிவிட்டு கீழ் குறிப்பிட்ட பிரிவை பிரதியீடு செய்து அப்பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது:-

“ஏதேனும் ஒரு மிருகத்துடன் இயற்கைக்கு மாறாக பாலியல் ரீதியான உடலுறவில் ஈடுபடும் நபருக்கு பத்து ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு சிறைத் தண்டனை விதிக்கப்படல் வேண்டும் என்பதோடு அவருக்கு அபராதமும் விதிக்கப்படல் வேண்டும்.”

தெளிவுபடுத்தல் அணுகல் போதுமானது.

நபர்களுக் கிடையே ஒழுக்கயீனமான செயற்பாடுகள் பற்றி குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளை நீக்குதல்

முதன்மை சட்டவாக்கத்தின் 365அ ஆம் பிரிவை நீக்குதல்

(ii) பிரதான சட்டவாக்கத்தின் 365அ உறுப்புரை இந்த சட்டத்தின் மூலம் நீக்கப்படுகிறது.

*மேலும் சந்தேகத்தை தெளிவுபடுத்தும் பிரிவு*

(iii) பாலியல் நோக்கினை சட்டரீதியான குற்றமாகக் கருதும் விதிகளைத் திருத்துவது இந்தச் சட்டத்தை இயற்றுவதில் சட்டமன்றத்தின் நோக்கமாகக் கருதப்படல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.